Samayanallur Thermal Station.

* 154. Q.—THIRU D. SANTOSHAM: Will the Hon. the Minister for Industries be pleased to state:

(a) the ways in which the former site of the Samayanallur Thermal Station is being utilised; and

(b) the proposals, if any, for the fuller utilisation of the site, buildings and staff?

சமய நல்லூர் அனல் மின் நிலையம்.

திரு. டி. சந்தோஷம்: மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சமய நல்லூர் அனல் மின் நிலையம் முன்னர் இருந்த இடம் எவ்வகையில் இப்போது பயன் படுத்தப்பட்டு வருகிறது?

(இ) அந்த இடத்தையும் கட்டிடங்களையும், பணியாளரையும் முழு அளவில் பயன் படுத்திக்கொள்வதற்கான திட்டங்கள் எவையேனுமிருப்பின், அவை யாவை?

THE HON. THIRU S. J. SADIQ PASHA: (a) A pre-stressed concrete pole manufacturing Centre, a workshop manufacturing line materials, an auto-section for maintaining Board's vehicles and a body-building section for lorries and vans are now located in the site.

(b) Shifting of special maintenance sub-division from Pasumalai, a regional work-shop and utilisation of existing Railway siding at Power House premises for forming a Regional Stores for iron and steel materials are under way. Establishment of a Transformer Repair Bay is under consideration.

THIRU D. SANTOSHAM: Sir, considering the vast resources available there, will it not be possible to start a sophisticated industry like Bulb making and so on?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவரவர்களே, அது தனியாகப் பரிசீலிக்கப்பட வேண்டிய விஷயம்.

சட்டமன்றப் பேரவை LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

திரு. கே. ராஜாராம் : தலைவரவர்களே, இந்த ரயில்வே சைடிங் இன்னும் அங்கு இருக்கிறது. வருடா வருடம் ரெயில்வேக்கு அரசு பணம் கட்டிக்கொண்டிருக்கின்றது. அது தேவைதானா ? அப்படித் தேவையில்லை என்றால் எடுத்து விடலாமே. அதற்கு அவசியம் இருக்கிறதா ? ஏன் வருடா வருடம் பணம் கட்டிக்கொண்டிருக்க வேண்டும்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, இப்போது திட்டத்தின் அடிப்படையிலே அது தேவை என்று கருதப்படுகிறது. அதற்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 8,000 ஆகிறது என்று செலவுக் கணக்குக் கொடுத்திருக்கின்றார்கள். நாம் கருதிக்கொண்டிருக்கிற திட்டங்களுக்காக அந்த ரயில்வே சைடிங் பயன் படும் என்று சொல்கிறார்கள்.

(பிற்பகல் 4-10)

Gherao of Deputy Chief Accounts Officer in the Revenue Unit Office at Podanur.

* 155. *Q.*—Thiru G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Industries be pleased to state :

(*a*) whether it is a fact that the Deputy Chief Accounts Officer in the Revenue Unit Office; at Podanur was gheraoed by some persons on 31st May 1974 ,

(*b*) if so, the reason therefor ; and

(*c*) the action taken on the persons who kept the Officer in illegal confinement ?

போத்தனூர் வருவாய் பிரிவு அலுவலகத்திலுள்ள கணக்குத் துணை தலைமை அதிகாரியை முற்றுகையிடல்.

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) போத்தனூர், வருவாய்ப் பிரிவு அலுவலகத்திலுள்ள கணக்குத் துணை தலைமை அதிகாரியை 1974 மே திங்கள் 31 ஆம் நாளன்று சிலர் சூழ்ந்து கொண்டு முற்றுகையிட்டது உண்மையா ?

(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை ?

(உ) அந்த அதிகாரியைச் சட்ட விரோதமாக அடைத்து வைத்திருந்தவர்கள் மீது எடுத்த நடவடிக்கை யாது ?